சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி
முன்னிலை: **திருமதி.P மோகனவள்ளி, B.A., M.L.,**
சார்பு நீதிபதி பொள்ளாச்சி

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 01 ஆம் நாள் சனிக்கிழமை
(2055 திருவள்ளுவராண்டு குரோதி வருடம் தை திங்கள் 19 ம் நாள்)

இடை மனு எண். 1/2024
–in–
அசல் வழக்கு எண். 284/2023

வேலுமணி, த/பெ. தெண்டபாணி, வயது 27, இந்து, வசிப்பிட முகவரி கதவு எண்.4/178, நாச்சிபாளையம் கிராமம், கஸ்பா, பழையூர் அஞ்சல் – 642 123, ஆனைமலை வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

..மனுதாரர்/வாதி

/எதிர்/

1. நாகராஜ், த/பெ. நல்லான், வயது 55, இந்து, வசிப்பிட முகவரி கதவு எண்.4/177, நாச்சிபாளையம் கிராமம், கஸ்பா, பழையூர் அஞ்சல் – 642 123, ஆனைமலை வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

2. இந்துமதி, த/பெ. நாகராஜ், வயது 30, இந்து, வசிப்பிட முகவரி கதவு எண்.4/177, நாச்சிபாளையம் கிராமம், கஸ்பா, பழையூர் அஞ்சல் – 642 123, ஆனைமலை வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

..எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் வகுமுறை 38 விதி 5 ன் கீழ் மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு தக்க ஜாமீன் உடனடியாக ஒப்படைக்கும் படியும் இல்லாவிடில் மனுச்சொத்துக்களை மேற்படி அசல் வழக்கின் தீப்புக்கு முன் ஜப்தி செய்து உத்தரவிட்டும் இம்மனுவின் விசாரணை முடியும் வரை இடைக்கால முன் ஜப்தி செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள் 06.06.2024

இம்மனுவானது, கடந்த 22.01.2025 ஆம் தேதியன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றபோது, மனுதாரர்/வாதிக்காக வழக்கறிஞர் திரு.C.P.கருணையானந்தன், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.K.A.சுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## இறுதி உத்தரவு

1) முடிவாக இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

2) மனுச்சொத்தை பற்றுகை செய்ய வாய்தா 23.04.2025.

3) படி கட்ட கால அவகாசம் 2 நாட்கள்.

## சொத்து விபரம்

கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி உப – பதிவு மாவட்டம், ஆனைமலை வட்டம், பழையூர் கிராமம் புலத்தில், க.ச.39/3B நெ. காலையில் வீட்டுமனை பட்டா எண். 957 க்கு கட்டுப்பட்ட மனையிட நிலத்துண்டு நெ. 24 க்கு செக்குபந்தியும், அளவுகளும்,

| | |
|---|---|
| மனை எண் – 26 க்கும் | ... வடக்கு |
| மனை எண் – 23 க்கும் | ... கிழக்கு |
| மனையிட பாதைக்கும் | ... தெற்கு |
| மனை எண் – 21 க்கும் | ... மேற்கு |

இதன் மத்தியில், 2 செண்ட் (அ) 80 ச.மீ விஸ்தீரணமுள்ள அடிநிலத்தில் அமைந்துள்ள இடம் மற்றும் கிழக்கு பார்த்த ஓட்டுவில்லை வீடு வகையறா

சகிதம்.

ஷை சொத்தின் வரி விதிப்பு எண். 318 மற்றும் மின் இணைப்பு எண். 911.

ஷை சொத்துக்கள் பழையூர் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டது.

இன்று 2025ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 01ம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

**ஒப்பம்/−(P.மோகனவள்ளி)**
**சார்பு நீதிபதி, பொள்ளாச்சி.**

Final Order

**I.A.No.01/2024**

**O.S.No.284/2023**

**01.02.2025**